International Training Program (ITP)

# On-side Education of Practical Languages for Area Studies

# Report in 2012

-Tamil, Centre for the Study of Developing Societies, 2 Jul. 2012-1 Oct. 2012-

Year of Enrollment: 2012
Graduate School of Asian and African Area Studies
Mami Abe

## On my research theme and/or Language Training

தற்காலத்தில் தலித்துக்களின் கிறிஸ்தவ சமய மனமாற்றம் நிகழ் காலத்தில் கிறிஸ்தவத்திற்கு மன மாறும் தலித்துக்கள் என்பதே எனது ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். தலித்துக்கள் இந்திய பாரம்பரிய சாதீய வரலாற்றில் தலித் என்னும் பதன் தீண்டத்தகாதவர், புறக்கணிக்கப்பட்டவர் அல்லது ஹரிஜன் என்று தாழ்த்தப்பட்ட பிரிவினரைக் குறிக்கும். இருபதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயத்திற்கு மனமாறிய தலித்துக்களின் நடத்தை முறை எளிதில் காணக்கூடிய ஒன்றாகும். அவைகள் கீழ்க்கண்ட நோக்கங்களை உள்ளடக்கியது. ஒன்று அவர்களை வேறுபடுத்தும் மேலாதிக்க சக்திகளிடமிருந்து சமுதாய உயர்நிலை மேம்பாடும், மற்றொன்று அருட்பணியாளர்களால் கொடுக்கப்பட்ட மேற்கத்திய கல்வியை பின்பற்றுதலுமாகும். இந்த தலைப்பில் பெரும்பாலான ஆய்வுகள் மேற்கத்திய கல்வி முறையில் தலித்துக்களின் பின்தங்கிய சமூக, பொருளாதார நிலையிலிருந்து உயர்நிலை அடைந்துள்ளனர் என்பதை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டது. பலரின் வாதத்தின் படி, தலித்துக்கள், மேற்கத்திய அருட்தொண்டர்கள் உணவுக்காகவும், படிப்பிற்காகவும் கிறிஸ்தவத்திற்கு மதமாறியுள்ளனர் என சாடுகின்றனர்.

கிளார்க் என்பவர் சுட்டியபடி கீழ்திசை நாட்டவரின் பொறி என்ற நூலின் கூற்றுப்படி, மதம் மாறியவர்களின் தன்நிலை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அவர் மேலும் கூறகையில், தலித்துக்கள் இந்து சமயத்தின் உலக உயர் குறிக்கோளை நிராகரித்துவிட்டனர் என வலியுறுத்துகிறார். அவரின் கூற்றுப்படி மதமாற்றம் என்பது சாதிய வேற்றுமைகளுக்கு எதிரான போராட்ட வழிமுறை.

இந்த அறிக்கையில் மதமாற்றம் என்பது மதமாறியவர்களின் ஒட்டுமொத்த உருமாற்றத்தை உள்ளடக்கியதாகவும் அது ஆன்மீக மற்றும் பொருள் உலகு சார்ந்த என வேறுபடுத்தி பிரிக்க இயலாத ஒன்றாக புரிந்து கொள்ளப்படுகிறது. தலித் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானோர் ஆதிதிராவிட சலுகைகளை பெறுவதற்காக தங்களின் மத/மன மாற்ற உண்மைகளை மறைத்துள்ளனர். தலித் கிறிஸ்தவ இயக்கத்தை சேர்ந்தவர்கள் தலித்கிறிஸ்தவர்கள் மதமாறி இருந்தாலும் சமய நம்பிக்கையை தவிர வேறு எந்த மாற்றத்தையும் கொண்டு வர இயலவில்லையென வலியுறுத்துகின்றனர். இந்நிகழ்வின் அரிதான உண்மைகளை வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.